
Centre for Research on Successful Ageing

SMU SINGAPORE MANAGEMENT UNIVERSITY

**செய்திக்கடிதம்-இதழ் 07** பிப்ரவரி **2022**

ROSA-வின் செய்திக்கடிதத்தின் இவ்விதழில், எங்கள் தொடக்கக் கருத்தரங்கம் குறித்த புதுச்செய்தியை உங்களுக்கு வழங்குகிறோம். மேலும், சிங்கப்பூரில் COVID-19 நிலைமை குறித்து நவம்பர் 2021-இல் கண்டறியப்பட்ட பல முக்கியக் கண்டுபிடிப்புகளை வழங்குகிறோம். எங்கள் ROSA குழுவின் மேலும் இரண்டு மதிப்புமிக்க உறுப்பினர்களையும் அறிமுகப்படுத்துகிறோம்!

## ROSA-வின் சிறப்பம்சங்கள்




*இடமிருந்து வலமாக: பேராசிரியர் லில்லி காங், பேராசிரியர் பாலின் ஸ்ட்ராக்கன், டாக்டர் டான் சீ லெங், திரு சியா மியா சியாங் மற்றும் திரு ஜேம்ஸ் தியோ*

30 நவம்பர் 2021 அன்று "புதிய தொடக்கங்கள்: முதியோர்களை ஓயாத்தொற்றிடர் சார்ந்த சூழலில் செழிக்கச் செய்தல்" என்ற கருப்பொருளில் வெற்றிகரமாக மூப்படைதல் குறித்த தனது தொடக்க ஆண்டு கருத்தரங்கத்தை ROSA நடத்தியது. இந்நிகழ்வில் மனிதவள அமைச்சர் டாக்டர் டான் சீ லெங்; சிங்கப்பூர் மேலாண்மை பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் லில்லி காங்; டிரெஸ்டன்-டெக்னிஸ்ச் பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் உர்சுலா ஸ்டாடிங்கர் மற்றும் தி நீ ஆன் கொங்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்கள் கலந்துகொண்டனர். தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (NTUC), சிங்கப்பூர் தேசிய முதலாளிகள் கூட்டமைப்பு (SNEF), TOUCH சமூகச் சேவைகள், தேசிய தொண்டூழிய மற்றும் அறத்தொண்டு மையம் (NVPC), ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான நிறுவனம் (AIC) ஆகியவற்றின் மூத்த பிரமுகர்கள் மற்றும் ROSA-வின் ஆராய்ச்சியாளர்கள் ஒன்றிணைந்து பொருளாதார நலம், மனதளவிலான மீள்திறன், ஓயாத்தொற்றிடர் காலத்தில் மூத்தோர்களின் சமூக ஒருங்கிணைப்பு போன்ற தலைப்புகளில் மூன்று குழு விவாதங்களில் பேச்சாளர்கள் ஆய்வு செய்தனர்.

ஒட்டுமொத்தமாக, கருத்தரங்கம் மாபெரும் வெற்றி பெற்றது. அதில் 32க்கும் மேற்பட்ட வெவ்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 160க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். எங்கள் SLP பதிலாளர்களில் சிலர் கருத்தரங்கில் கலந்துகொள்ள முடிந்ததைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். மேலும், விவாதங்கள் செழுமையாக இருப்பதை நீங்கள் கண்டீர்கள் என்று நம்புகிறோம். கருத்தரங்கத் தொடர் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படுவதால், இவ்வாண்டுக்கான கருத்தரங்கில் உங்களில் அதிகமானோரைக் காண முடியும் என்று நம்புகிறோம்!

கருத்தரங்கத்தின் போது நடந்த முக்கிய விவாதங்களின் முழுச் சுருக்கத்திற்கு, QR குறியீட்டை ஸ்கேன் செய்து எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

## ROSA ஊழியர் அம்சங்கள்




ரேச்சல் ஆகஸ்ட் 2021-இல் ROSA-வில் ஆராய்ச்சி உதவியாளராகச் சேர்ந்தார். அவரது தற்போதைய பணிகள் மையத்தின் மொழிபெயர்ப்பு ஆராய்ச்சிக்கு உதவுவதுடன் நிர்வாக ஆதரவையும் வழங்குவதாகும். ROSA-வில் நடத்தும் இந்த ஆராய்ச்சி வயதானவர்கள் போன்ற சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு நேர்மறையான மாற்றத்தை ஊக்குவிக்கும் செயல் நுண்ணறிவுகளை அளிக்கும் என்று அவர் நம்பியதால் இப்பணி அவருக்கு அர்த்தமுள்ளதாக இருக்கிறது. தனது வேலையைத் தவிர, மெதுவோட்டம் ஓடுவதையும் உருளிக்காலணிச்சறுக்கலையும் ரேச்சல் ரசிக்கிறார். மேலும் அவர் இசை மற்றும் கலையை மிகவும் ரசிக்கிறார், அவை அவரைச் சுறுசுறுப்பாகவும் ஆக்கப்பூர்வமாகவும் இருக்க உதவுகின்றன.



யான் எர் ரோசாவில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணிபுரிகிறார், அவர் ஜூலை 2021-இல் குழுவில் சேர்ந்தார். மையத்தின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுப் பணிகளில் உதவுவது அவரது முக்கிய பணிகளில் அடங்கும். வெற்றிகரமாக மூப்படைதல் பற்றிய ROSA-வின் ஆராய்ச்சியை ஆதரிப்பதில் அவர் மகிழ்ச்சியடைகிறார், மேலும் சிங்கப்பூரில் இப்போதும், வரும் வருடங்களிலும் வயதானவர்களின் வாழ்க்கையில் அது ஏற்படுத்தும் அர்த்தமுள்ள தாக்கத்தைக் கண்டு உற்சாகமாக இருக்கிறார். தனது ஓய்வு நேரத்தில், யான் எர் தனது நேரத்தை ஓவியம் வரைவதிலும், காணொளிகளைப் பின்பற்றி உடற்பயிற்சி செய்வதன் மூலம் தனது உடற்தகுதியை வளர்த்துக் கொள்வதிலும் மகிழ்கிறார்.

## ஆராய்ச்சியின் சிறப்பம்சங்கள்

நவம்பர் 2021-இல், COVID-19 தடுப்பூசியின் திறனூக்கி ஏற்றுகளைப் பெறுவதற்கான உங்கள் விருப்பம் தொடர்பான கேள்விகளைக் கேட்டோம். கீழேயுள்ள படம் ஏற்கனவே திறனூக்கி ஏற்றுகளைப் பெற்றவர்கள், திறனூக்கி ஏற்றுகளைப் பெறத் திட்டமிட்டிருந்து இருப்பினும் இன்னும் பெறாதவர்கள் மற்றும் திறனூக்கி ஏற்றுகளை ஒருபோதும் போடத் திட்டமிடாதவர்கள் ஆகிய வகையிலான SLP பதிலாளர்களின் விகிதாச்சாரத்தை முன்வைக்கிறது.




*படம் 1: நவம்பர் 2021-இல் திறனூக்கி ஏற்றுகளைப் பெறுவதற்கான விருப்பத்தின் விநியோகம்*

தடுப்பூசி போட்ட எங்கள் பதிலாளர்களில் கிட்டதட்ட அனைவரும் ஏற்கனவே திறனூக்கி ஏற்றுகளைப் பெற்றுள்ளனர் (61.6%) அல்லது திறனூக்கி ஏற்றுகளைப் பெற திட்டமிட்டுள்ளனர் (35.5%) என்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம், பதிலாளர்களில் சிறுபான்மையினர் (2.9%) மட்டுமே திறனூக்கி ஏற்றுகளைப் பெற விரும்பவில்லை.

திறனூக்கி ஏற்றுகளைப் பெற விரும்பாத பதிலாளர்களிடம், அதற்கான காரணம் என்ன என்று கேட்கப்பட்டது. திறனூக்கி ஏற்றுகளின் எதிர்மறைப் பக்கவிளைவுகளைப் பற்றி அவர்கள் கவலைப்படுகிறார்கள் (60.1%), மூன்றாவது திறனூக்கி ஏற்றுகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் பற்றிய அறிவியல் சான்றுகள் இல்லாதது (45.8%), மற்றும் திறனூக்கி ஏற்றுகளின் செயல்திறனை அவர்கள் நம்பவில்லை (38.9%) ஆகியவை அவர்களால் கூறப்பட்ட முதல் மூன்று பொதுவான காரணங்கள் ஆகும்.




*படம் 2: திறனூக்கி ஏற்றுகளைப் பெற விரும்பாததற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள்*

ஒட்டுமொத்தமாக, திறனூக்கி ஏற்றுகளைப் பெறுவதில்லை என்ற முடிவு, திறனூக்கி ஏற்றின் செயல்திறன் மற்றும் பாதுகாப்பு குறித்த நம்பிக்கையின்மையால் முக்கியமாக ஏற்பட்டிருக்கிறது. தடுப்பூசி அல்லது திறனூக்கி ஏற்றுகளை எடுப்பது பயம் கொண்டதாக இருக்கும் என்பதை நாங்கள் புரிந்துகொண்டாலும், அத்தகைய அச்சம் கொண்டவர்கள் COVID-19 தடுப்பூசிகள் குறித்த சுகாதார அமைச்சின் இணையதளத்தைப் (https://www.moh.gov.sg/covid-19/vaccination) பார்வையிட ஊக்குவிக்க விரும்புகிறோம். அவ்விணையத்தளம் தடுப்பூசி எவ்வாறு செயல்படுகிறது என்பதோடு தடுப்பூசி மற்றும் திறனூக்கி ஏற்றுகளைப் பெறுவது கிட்டத்தட்ட அனைவருக்கும் ஏன் பாதுகாப்பானது என்பதைப் பற்றி மேலும் புரிந்துகொள்ள உதவுவதற்காக ஏராளமான வளங்களைக் கொண்டுள்ளது. நம்பிக்கைக்குரிய வளமூலங்களில் தடுப்பூசியைப் பற்றி மேலும் படிப்பதன் மூலம், தடுப்பூசி மற்றும் திறனூக்கி ஏற்றுகளைப் பற்றி மேலும் நம்பிக்கை பெறமுடியும் என்று நம்புகிறோம்!

## கருத்தாய்வுகளின் தேதிகள்

- **பிப்ரவரி கருத்தாய்வு: 1 - 22 பிப்ரவரி 2022**
- **மார்ச் கருத்தாய்வு: 1 - 27 மார்ச் 2022**
- **ஏப்ரல் கருத்தாய்வு: 1 - 25 ஏப்ரல் 2022**

## எங்களைத் தொடர்புகொள்ள

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வகையில் உதவி தேவையென்றால் அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கருத்துகளோ இருந்தால், தயவுசெய்து 6808 7910 என்ற எங்களுடைய நிலையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது slp@smu.edu.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துகளைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY